

தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு அவர்கள் மறைவெய்தியதையொட்டி, அவர்களின் இல்லத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (25.5.2025) நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மை யினர் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சரும் ,கழகத் தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்டம் நீர்வளத்துறை சார்பில் காலிங்கராயன் வாய்க்கால் வலது கரையில் அமைந்துள்ள பேபி வாய்க்காலில் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவங்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழகச் செயலாளர் குமாரவடிவேல், மாமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஜெகதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஸ்ரீ சிவா மஹாலில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் தென்னை மற்றும் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை குறித்து மாவட்ட அளவிலான கருத்தரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு கண்காட்சி அரங்குகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், இயக்குநர் (தென்னை வளர்ச்சி வாரியம், கோவை மண்டலம்) இ.அறவாழி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) சு.சசிகலா உள்பட பலர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

# உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி - கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - ஆர்.காந்தி சிறப்புரை!

சென்னை, மே 27,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. உத்திர மேரூர் சட்டமன்றத் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நாளை (28.5.2025 - புதன்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு, தயா திருமண மண்டபம், மிலிட்டரி ரோடு, ஓரிக்கையில்நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுயதர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். உத்திரமேரூர் ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன், காஞ்சிபுரம் மாநகர, 3வது பகுதிக் கழகச் செயலாளர் அ.தசரதன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், டி.குமார், பி.சேகர், க.குமணன், என்.எஸ். பாரிவள்ளல், வாலாஜாபாத் என். பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், காஞ்சிபுரம் பொறுப்பு அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி எழிலரசன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் சூர்யா வெற்றி கொண்டான், மேயர் எம். மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், ஹேமலதா ஞானசேகரன், எஸ்.கே.பி.சீனிவாசன், பி. சசிக்குமார், எழிலரசி சுயதரமூர்த்தி, இல்லாமல்லி ஸ்ரீதரன் ஆகியோர் கலயது கொண்டு சிறப்பிக்கின்றனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.மணி, டி.சஞ்சய் காயதி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே இய நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், பேரூர்க் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலயது கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட

# பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, மே 27 -

தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட, கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் அறிக்கை.

அவரது அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அன்புத் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், மாநகர் மாவட்ட செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் ஆகிய எனது தலைமையில் இன்று ( 27.05.2025 - செவ்வாய்க்கிழமை ) மதியம் 12.00 மணியளவில் வடகோவை, கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல் அரங்கில், தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்க ப்பட்ட, மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளு மன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் கே.பி.திருமலைராஜ், தே.லாரா பிரேம் தேவ், கோவை அருண் (எ) அருண்குமார், துரை பிரவீண்குமார், க.மணி கண்டன், சி.எம்.எஸ்.இப்னு மசூது ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஊடகவியலாளர் இந்திரா தேரடி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் வாழப்பாடி உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்கம் புத்தகத்தை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் நிர்வாகிகளிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் கு.சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஆர். வி.ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தொகுதி மேற்பார்வையாளர் கணேஷ் குமார், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு புத்தகத்தை பெற்றுக்கொண்டனர்



கோவை, ஒண்டிப்புதூர் வார்டு எண் 56, பேச்சியண்ணன் பிள்ளைவீதி, கம்மவார் வீதி, போடி நாயக்கர் வீதி, சவுடம்மண் கோவில்வீதி, நடுவீதி பகுதிகளில் பொதுமக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளான சாலைகளை சீரமைத்தல், குடிநீர் தொட்டி பராமரிப்பு, மழைநீர் வடிகால் புனரமைப்பு, தெருவிளக்குகள் பராமரிப்பு, புதிய தெருவிளக்குகள் அமைத்தல் பணிகளை கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் நேரில் சென்று பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் விரைவில் சரிசெய்து தருமாறு தெரிவித்தார். இதில் மாமன்ற உறுப்பினர் சாந்தாமணி பன்னீர்செல்வம், வட்டக் கழகச் செயலாளர்கள் த.சுரேஷ்குமார், LPF சண்முகம், பகுதி துணைச் செயலாளர் கஸ்தூரி அருண், சிவா, கனகராஜ், சாந்தாமணி, ஆ.சதீஷ்குமார், ராஜேந்திரன், பட்டாசு பாலதண்டாயுதம், அன்பு பன்னீர்செல்வம், செந்தில் வேல், ராஜசேகர், எம்.முருகேசன், துரை, என்.செந்தில்குமார், பரமசிவம், தங்கவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை!



கோவை, மே 27 -

தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை.

அவரது அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர், தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில் இன்று (27.05.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணியளவில் பெரிய நெகமம், ஸ்ரீ தங்கவேல் அய்யன், கே.வி.கே திருமண மண்டபத்தில் தலைமைக் கழக ஒப்புதலுடன் நியமிக்கப்பட்ட கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்மாவட்டச்செயலாளர் தளபதி முருகேசன் ஆகிய எனது தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்புரையில் பேரூர் கழக செயலாளர் ராசு (எ) முத்துக் குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், ச.புவனேஷ், வி.ஆர். நிஷாந்த், கே.சபரி கிருஷ்ணன், சல்மான்நாசர், இருகூர் உதயபூபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஊடகவியலாளர் இந்திரா தேரடி கலந்து கொண்டு சிறப்பையாற்றுகின்றனர். கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிர காஷ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கழக உயர்நிலை செயல் தி ட்டக் குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் மு.கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மணியன்

### மே 27 (2009)



கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலைஞர் விருது' வழங்கிசிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**